# வாழையின் விலை நிலையாக இருக்கும்

வாழை உற்பத்தியில், உலகளவில் இந்தியாவின் பங்களிப்பு முக்கியமானது. மொத்த வாழை உற்பத்தியில் 2018-19 ல் சுமார் 26.61 சதவீதம் இந்தியா பங்களிக்கின்றது. தேசிய தோட்டக்கலை வாரியத்தின் இரண்டாவது முன்கூட்டிய அறிக்கையின் படி, 2019-20 ஆம் ஆண்டு இந்தியாவில் வாழை 8.78 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு 315.04 இலட்சம் டன்கள் உற்பத்தியாகும் என்று அறிவித்துள்ளது. ஆந்திரப்பிரதேசம், குஜராத், மகாராஷ்டிரா, தமிழ்நாடு, உத்திர பிரதேசம், கர்நாடகா, மத்திய பிரதேசம் மற்றும் கேரளா ஆகியவை வாழை பயிரிடப்படும் முக்கிய மாநிலங்களாகும்.

மண் மற்றும் தட்பவெட்ப சூழ்நிலை காரணமாக பூவன், கற்பூரவள்ளி மற்றும் நேந்திரன் ஆகிய இரகங்கள் உற்பத்தியில் தமிழ்நாடு முதன்மையாக திகழ்கிறது. ஈரோடு, தேனி, தூத்துக்குடி, கடலூர், திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் வாழை அதிகளவில் பயிரிடப்படுகிறது. பூவன் இரகமானது தமிழ்நாடு மற்றும் கேரளாவின் சில பகுதிகளில் இலை நோக்கத்திற்காகவும் பயிர் செய்யப்படுகிறது.

தற்போது, கோயம்புத்தூர் மற்றும் திருச்சி சந்தைக்கு, தஞ்சாவூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, திருச்சி மற்றும் கடலூர் ஆகிய பகுதிகளிலிருந்து பூவன் வரத்தும், சத்தியமங்கலம், கோபிசெட்டிப்பாளையம் ஆகிய பகுதிகளிலிருந்து கற்பூரவள்ளி வரத்தும் வருகிறது. நேந்திரன் வரத்தானது மேட்டுப்பாளையம் மற்றும் கேரளாவிலிருந்து வருகிறது. வரும் மாதங்களில் வாழைக்கான தேவை நிலையானதாக இருக்கும்.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டம் கடந்த 10 ஆண்டுகளாக கோயம்புத்தூர் சந்தையில் நிலவிய பூவன், கற்பூரவள்ளி மற்றும் நேந்திரன் விலை மற்றும் சந்தை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின்

முடிவின் அடிப்படையில், நவம்பர் ‘20 முதல் டிசம்பர் ‘20 மாதங்களில் பூவன் வாழையின் சராசரி பண்ணை விலை கிலோவிற்கு ரூ. 12, கற்பூரவள்ளி ரூ. 20 மற்றும் நேந்திரன் வாழையின் பண்ணை விலை கிலோவிற்கு ரூ.30 வரை இருக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது. மேலும், பருவமழை மற்றும் வரும் விழாக்காலம் எதிர்கால விலையை உறுதி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் அடிப்படையில் விவசாயிகள் தகுந்த விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி- 0422-2431405


**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


பேராசிரியர் மற்றும் தலைவர்
பழப்பயிர்கள் துறை
தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-6611269

**Banana price will be stable**

India is the top producer with a contribution of 26.61 per cent of global banana production during 2018-19. According to the Second Advance Estimates of National Horticulture Board (2019-20), the area under banana is 8.78 lakh hectares with a production of 315.04 lakh tonnes. Andhra Pradesh, Gujarat, Maharashtra, Tamil Nadu, Uttar Pradesh, Karnataka, Madhya Pradesh and Kerala are the major banana producing states.

Tamil Nadu is the leading producer of banana cultivars viz., poovan, karpuravalli and Nendran owing to its climatic and soil conditions. Major banana growing districts of Tamil Nadu are Erode, Theni, Tuticorin, Cuddalore, Trichy, Coimbatore, Tirunelveli, and Kanyakumari. Poovan is also commercially cultivated for leaf purpose throughout Tamil Nadu and in certain parts of Kerala.

Arrivals of poovan banana are to Trichy and Coimbatore markets are from Thanjavur, Perambalur, Pudukottai, Trichy and Cuddalore. Karpuravalli banana arrivals are from Sathyamangalam, Gobichettipalayam and Mettupalayam. Nendran arrivals are coming from Mettupalayam and Kerala. It is expected that, demand for banana will be static in coming months.

The TN-IAM Project funded Price Forecasting Scheme of the Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University analysed the past 10 years prices of cultivars of Poovan, Karpooravalli and Nendhran banana of Coimbatore market. The results of analysis and traders survey indicated that the expected average farm gate

price would be Rs. 12 per kg for Poovan, Rs.20 for Karpuravalli and Rs. 30 per kg for Nendhran respectively in Coimbatore market during November - December’2020. Subsequent price oscillation will be subjected to monsoon rains and festival demand.  Hence, farmers are advised to take appropriate selling decision accordingly.

***For further details contact:***

*Domestic and Export Market Intelligence Cell*
*Centre for Agricultural and Rural Development Studies*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore – 641 003.*
*Phone: 0422-2431405*

***For technical details please contact:***

*Professor and Head*
*Department of Fruit Crops*
*Horticultural College & Research Institute*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore -641003.*
*Phone -0422 -6611269*